


**13. 12. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. 2001-ம் ஆண்டு நாடாளுமன்ற தாக்குதலில் உயிரிழந்தோர் நினைவாக பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் மலரஞ்சலி செலுத்தினர்.

2. ஒருங்கிணைந்த கட்டமைப்பு, துல்லிய தாக்குல் சுயசார்பு பாரதம் போன்றவை எதிர்கால ராணுவ வலிமையை பறைசாற்றுவதாக முப்படை தளபதி ஜென்ரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. தமிழக மாணாக்கர் கல்வியோடு, ஆராய்ச்சி செயல்திட்ட இலக்குடன் பயணிப்பதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. T.R.B. ராஜா கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.

5. ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் தன்யா ஹேமந்த் – இஷா ராணியை இன்று எதிர்கொள்கிறார்.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

### நாடாளுமன்ற தாக்குதல்

நாடாளுமன்ற வளாகத்தில் 2001-ம் ஆண்டு இதேநாளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 9 பேருக்கு நாடு இன்று அஞ்சலி செலுத்துகிறது.

இந்நாளையொட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில் தீவிரவாதத்திற்கு எதிராக போராட இந்தியா உறுதி பூண்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

நாட்டை காக்கும் வகையில் உயிரிழந்தோர் அனைவருக்கும் நாடு கடமை பட்டிருப்பதாக கூறினார்.

குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவை தலைவருமான திரு. சி.பி. ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங், டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் நாடாளுமன்ற வளாகத்தில் உயிரிழந்தோர் நினைவாக மலரஞ்சலி செலுத்தினர்.

மத்திய அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங், டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் நாடாளுமன்ற தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த பாதுகாப்பு படையினரின் வீரத்தையும் துணிச்சலையும் நினைவு கூர்ந்ததுடன், நாடு என்றென்றும் அவர்களுக்கு கடன்பட்டிருப்பதாக கூறினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அனில் சௌஹான்

மாறிவரும் பாதுகாப்பு சூழல்களுக்கு ஏற்ப எவ்வித சவாலையும் சமாளிக்க பாதுகாப்பு படையினர் தங்களை முழுமையாக தயார்படுத்தி வருவதாக முப்படை தளபதி ஜென்ரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் அருகே துண்டிகல் விமானப்படை பயிற்சி அகாடமியில், 216-வது ஒருங்கிணைந்த பயிற்சி நிறைவு விழாவில் இன்று உரையாற்றிய அவர், வலுவான பாதுகாப்பு நிறுவனங்கள், ஜனநாயக நிலைத்தன்மை தொழில் நேர்த்தி போன்றவை முப்படைகளின் சிறப்பம்சமாக திகழ்கிறது என்று பாராட்டினார்.

முப்படைகளின் செயல்திறன் நவீன தொழில் நுட்பங்களுடன் மேம்பட்டு வரும் இத்தருணத்தில் புதிய அதிகாரிகள் விமானப்படையில் இணைந்திருப்பது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த கட்டமைப்பு, துல்லிய தாக்குதல், சுயசார்பு பாரதம் போன்றவை எதிர்கால ராணுவ வலிமையை மறுவடிவமைத்து உள்ளதாக குறிப்பிட்டார்.

முன்னதாக விமானப்படை பயிற்சியை நிறைவு செய்த இளம் அதிகாரிகளுக்கு குடியரசு தலைவரின் ஆணைகளை ஜென்ரல் அனில் சௌஹான் வழங்கினார்.

இந்திய கடலோர காவல்படை, கடற்படை மற்றும் வியட்நாமை சேர்ந்த 16 வீரர்கள் உட்பட, 244 பேரின் அணிவகுப்பு மரியாதையையும் ஜென்ரல் அனில் சௌஹான் ஏற்றுக்கொண்டார்.

வான் சாகச நிகழ்வுகளும் இதில் இடம்பெற்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் பயணம்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 4 நாள் அரசுமுறை பயணமாக ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் நாடுகளுக்கு நாளை மறுநாள் புறப்படுகிறார்.

இந்தியா - ஜோடார்ன் இடையே 75 ஆண்டுகால நட்புறவு நீடிக்கும் நிலையில் பிரதமரின் இந்த பயணம் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜோர்டன் மன்னர் கிங் அப்துல்லா பின் அல் ஹுசைனின் அழைப்பை ஏற்று அங்கு செல்லும் பிரதமர் முழு அளவிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து ஓமன் செல்லும் பிரதமர் அந்நாட்டு தலைவர்களை சந்தித்து பேசுகிறார்

பிரதமரின் இப்பயணத்தின் போது பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

உள்ளாட்சி தேர்தல்

கேரள மாநிலத்தில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் எதிர்கட்சியான ஐக்கிய ஜனநாயக முன்னணி UDF-ம், இடது ஜனநாயக முன்னணியான LDF-ம் பெரும்பாலான மாவட்டங்களில் முன்னணி வகிக்கின்றன.

மொத்தமுள்ள 6 மாநகராட்சியில் ஆளும் LDF கோழிக்கோடை தவிர அனைத்து இடங்களிலும் முன்னிலையில் உள்ளது.

36 நகராட்சிகளல் UDF 14-ல் முன்னிலை வகித்து வருகிறது.

பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி திருவனந்தபுரம் மாநகராட்சியில் முன்னிலை வகித்து வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

T.R.B. ராஜா

தமிழக மாணாக்கர் கல்வியோடு, ஆராய்ச்சி செயல்திட்ட இலக்குடன் பயணிப்பதாக மாநில தொழில்துறை அமைச்சர்
திரு. T.R.B. ராஜா தெரிவித்துள்ளார்.

சென்னை தாம்பரம் தனியார் கல்லூரியில் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் இறுதி போட்டியின் நிறைவு நாளில் பொறியியல் மாணாக்கரின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் பேசினார்.

நாடுமுழுவதும் ஹேக்கத்தான் போட்டியில் பங்கேற்றுள்ள ஆயிரத்து 800 பேரில், 22 சதவிகிதம் பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் என்று அவர் கூறினார்.

தமிழக மாணாக்கர் பிற மாநிலங்களுடன் ஹேக்கத்தானில் களமிறங்குவது ஆரோக்கியமானது என்று அமைச்சர் கூறினார்.

முன்னதாக பல்வேறு மாநில பொறியியல் மாணாக்கரின் ஹார்டுவேர் கண்டுபிடிப்புகள் பற்றி திரு. T.R.B. ராஜா கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சி.வி.கணேசன்

கடலூர் மாவட்டத்தில் 11 கோடி ரூபாய் மதிப்பிலான அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் இன்று அடிக்கல் நாட்டினார்.

இளையோர்களின் திறன் மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் வேப்பூர் வட்டம் கண்டப்பன்குறிச்சி – நல்லூர் சாலையில் இந்த தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் 4 அரசு பள்ளிகளில் 2 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள் உள்ளிட்ட விரிவாக்க பணிகளுக்கும் அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

லோக் அதாலத்

தமிழகத்தில் தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் இன்று நடைபெறுகிறது.

திருச்சி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் காசோலை மோசடி, வாகன விபத்து இழப்பீடு, ஜீவனாம்சம் உள்ளிட்ட நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு சமரச முறையில் தீர்வு எட்டப்பட்டு வருகிறது.

வேலூர் மாவட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக மாவட்ட முதன்மை நீதிபதி இளவரசன் தெரிவித்ததாக எமது செய்தியாளர் கூறிகிறார்.

.. வாய்ஸ் ..

விழுப்புரம் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இதுவரை நடைபெற்ற 3 அமர்வுகளில் 76 கோடி ரூபாய் தீர்வுத்தொகை வழங்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

விழுப்புரம் போராட்டம்

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.

விழுப்புரத்தில் ஜாக்டோ ஜியோ சார்பில் நடைபெறும் இந்த போராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், அரசு துறையில் உள்ள 30 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட காலி இடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடைபெறுகிறது.

தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் ஏராளமான அரசு ஊழியர்கள் இந்த போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கொடைக்கானல் வாய்ஸ்

கொடைக்கானல் மலைப்பகுதிகளில் நீர் பனிக்காலம் தொடர்வதால் கீழ்பூமி, ஜிம்கானா, உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சுற்றுலா பயணிகள் இந்த இயற்கை அழகை கண்டு ரசித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

விழுப்புரம் வாய்ஸ்

விழுப்புரம் மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

கன்னியாகுமரி வாய்ஸ்

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் களைகட்ட தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மின்கம்பியாளர் உதவியாளர் பணியிடங்களுக்கு இன்றும் நாளையும் நடைபெறுவதாக இருந்த தகுதித்தேர்வு நிர்வாக காரணங்களுக்காக வரும் 27, 28-ம் தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணை நந்தன் கால்வாய் இணைப்புத்திட்ட பணிகளை நீர்வளத்துறை சென்னை மண்டல தலைமை பொறியாளர் தலைமையிலான குழு இன்று ஆய்வுசெய்தது.

விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் 60-க்கும் மேற்பட்ட கிராமங்களில் குடிநீர் மற்றும் விவசாய தேவைகள் இத்திட்டம் மூலம் நிறைவேற்றப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேனி – அணை

தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு இன்று நண்பகல் முதல் வினாடிக்கு 2 ஆயிரத்து 250 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட வைகை ஆற்றங்கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் Tanya Hemanth, Isharani ஐ தற்போது எதிர்கொண்டுள்ளார்.

மற்றொரு ஆட்டத்தில் Unnati Hooda - Tasnim Mir உடன் மோதுகிறார்.

ஆடவர் ஒற்றையர் அரையிறுதியில் கிரண் ஜார்ஜ் – **Rounak Chouhan** ஐ இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖